# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
**இரா. செல்வக்கணபதி**

## தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கூறுகள்



www.saivamonline.com

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 5. தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கூறுகள்

உலக மொழிகளுள், எல்லா வளங்களும் நிரம்பிய, உயர் தனிச் செம்மொழிகள் மிகச் சிலவே உள்ளன. இவற்றுள், காலப் பழமையும், சாலப் பெருமையும் உடையது, நம் தாய் மொழியாகிய தமிழ். "வடவேங்கடம் தென்குமரி" ஆகிய எல்லைகட்கு இடையே, பரந்து கிடக்கும், இத்தமிழ் மண்ணில், கிளைத்த இலக்கியங்கள் மிகப் பலவாகும்.

*ஒரு மொழியை உயிராக நேசிக்கும், உலக இனங்கள் பலவற்றுள், தமிழ் இனம், முதன்மை பெற்று நிற்கிறது. இம் மொழியை உயிரினும் மேலாகக் கருதும் தமிழர்கள், தங்கள் சீரிய சிந்தனைகளையும், வாழ்க்கை அநுபவங்களையும் இம்மொழியில் பதிவு செய்து கொண்டனர்.*

ஒரு மொழியை உயிராக நேசிக்கும், உலக இனங்கள் பலவற்றுள், தமிழ் இனம் முதன்மை பெற்று நிற்கிறது. இம் மொழியை உயிரினும் மேலாகக் கருதும் தமிழர்கள், தங்கள் சீரிய சிந்தனைகளையும், வாழ்க்கை அநுபவங்களையும் இம்மொழியில் பதிவு செய்து கொண்டனர். நாடாளும் வேந்தர்களும், தமிழ் மொழி வளர்ச்சிக்கு, உயரிய பங்காற்றினர் என்பதைத் தமிழ் இலக்கிய வரலாறு நன்கு எடுத்தியம்புகிறது.

தமிழ் இலக்கியங்களை, அகம், புறம் எனப் பாகுபாடு செய்தனர்



www.saivamonline.com

நம் முன்னோர். அகம் என்பது ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே துய்க்கப்பெறும் காதல் இன்பத்தைச் சார்ந்தது. புறம் என்பது வெளிப்பட்டுத் தோன்றும் வாழ்க்கை முறையைக் குறித்தது. தமிழில், இவ்விரு கூறுகளிலும் அமைந்த இலக்கியத் தொகுதிகளைச் சங்க இலக்கியங்கள் என்பர். இவ்விரண்டு கூறுகளும் அல்லாது, சமூக அறங்களை வற்புறுத்தும் அறநூல் தொகுதிகளைக் கீழ்க்கணக்கு என முன்னோர்க் குறித்தனர். இவையன்றிக் கதை பொதி காப்பியங்களும், சமயம் சார்ந்த பனுவல்களும், தத்துவம் கூறும் சாத்திரங்களும், சிற்றிலக்கியங்களும் எனத் தமிழில் எழுந்த நூல் தொகுதிகள் பலவாகும். இவற்றின் இடையே காணக் கிடக்கும், அறிவியல் கூறுகளைத் தேடிக் காண்பது ஒரு பயனுடைய முயற்சியாக அமையும். இத்தேடல், நம் முன்னோர்களின் அறிவியல் சார்ந்த அறிவுடைமைக்குச் சான்று கூறி நிற்பதை அறிய வைக்கும்.

---

*அறிவியலும், தமிழ் நூல் பயிற்சியும் ஒருங்கே கைவரப் பெற்றவர்கள் இத்தகு முயற்சிகளில் ஈடுபடும் போது இன்னும் ஏராளமான தடயங்களை வெளிக் கொணர முடியும். இத்தகு ஆய்வு இன்று வரை முழுமையாக நிகழ்த்தப்பெறாமை பெரும் குறையே ஆகும்.*

---

தமிழ் இலக்கியங்கள் யாவும், அவ்வவற்றின் போக்கில், முற்கூறியவாறு, ஏதேனும் ஓர் உள்ளீட்டைச் சார்ந்தே அமைந்துள்ளன என்பதால் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க, தனி அறிவியல் நூல் ஏதும் தமிழில் முற்காலத்தே தோற்றம் கொள்ளவில்லை. என்றாலும், தேடிக் காணும் போது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வேறு எந்த மொழியிலும் காண முடியாத அறிவியல் பதிவுகளைத் தமிழ் இலக்கியம் தாங்கி நிற்கின்றது என்பதை உறுதி செய்ய முடிகிறது. அறிவியலும், தமிழ் நூல் பயிற்சியும் ஒருங்கே கைவரப் பெற்றவர்கள் இத்தகு முயற்சிகளில் ஈடுபடும் போது இன்னும் ஏராளமான தடயங்களை வெளிக் கொணர முடியும். இத்தகு ஆய்வு இன்று வரை முழுமையாக நிகழ்த்தப்பெறாமை பெரும் குறையே ஆகும்.

தமிழ் நூல்களுள், இடைச் சங்க காலத்து இலக்கியங்களுக்கு, மேல் வரம்பாக நின்ற பெருமை மிக்கது தொல்காப்பியம். இது எழுத்து, சொல், பொருள் என முத்திறத்தால் அமைந்தது. மொழி இலக்கணத்தையும், கவிதை இலக்கணம் கூறும் முகத்தான், தமிழர் வாழ்க்கை இலக்கணத்தையும் எடுத்தியம்பும் சிறப்புமிக்கது. இந்நூலுள் ஆங்காங்கே, நாம் வியக்கத்தக்க அறிவியல் நுட்பங்கள் பதிவு செய்யப்



www.saivamonline.com

பெற்றுள்ளமை நமக்குப் பெருமிதத்தைச் சேர்க்கின்றது.

தொல்காப்பியத்தின், முதல் அதிகாரமாகிய, எழுத்ததிகாரத்தில் எழுத்துக்களின் பிறப்புப் பற்றித் தொல்காப்பியர் கூறும் இலக்கணம், அறிவியல் சார்ந்த அணுகுமுறையாகக் காணப்படுகிறது. எல்லா மொழிகளும், எழுத்தின் வடிவம், ஒலி அளவு, என்பனவற்றைப் பேசிய காலத்தில், தொல்காப்பியம், எழுத்துக்கள் பிறப்பதற்குக் காரணமான மூலக் கூறுகளை ஆராய்கிறது. "கொப்பூழ் அடியாக, மேலே கிளர்கின்ற, உதானன் என்னும் பெயருடைய, வாயு தோன்றி, தலையின் கண்ணும், மிடற்றின் கண்ணும், நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லும், இதழும், நாவும், மூக்கும், அண்ணமும் புலப்பட, எட்டாகிய முறைமையை உடைய இடங்களில் ஓர் உறுப்போடு ஓர் உறுப்புத் தம்மிற்பொருத்தி அமைதிபெற எழுத்தின் பிறப்பு வேறுவேறு புலப்பட்டுத் தோன்றும்."

***தொல்காப்பியப் பொருளதிகாரம் வழங்கும் அறிவியல் கூறுகள் மிகப் பலவாகும். உலகத்தை, காடு, மலை, நீர், மணல் என நான்காகப் பகுத்து, அவற்றுக்கு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனப் பெயர் சூட்டி, அவர் இலக்கணம் நடத்திச் செல்வது, இயற்கையோடு இயைந்த நிலவியல் கூறுபாடாக அமைகிறது.***

இக்கருத்தமைந்த தொல்காப்பிய நூற்பா வருமாறு,

*"உந்தி முதலா முத்துவளி தோன்றித்*
*தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்*
*பல்லும் இதழும் நாவும் மூக்கும்*
*அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்*
*உறுப்புற் றமைய நெறிப்பட நாடி*
*எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்*
*பிறப்பின் ஆக்கம் வேறு வேறியல*
*திறப்படத் தெரியும் காட்சி யான"*

ஒலித்தோற்றத்திற்கு மூலமான காற்று, புறத்தே எழுந்து இசைப்பதன் முன், அகத்தே தோன்றி எழுந்து வரும் நிலைக்கண், அதற்கு மூன்று கூறுகள் உண்டு என்பதை, வேதத்தை மேற்கோள்காட்டித் தொல்காப்பியர் விளக்கும் "எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து" என்று தொடங்கும் நூற்பாவில் பதிவு செய்திருப்பது நமக்கு வியப்பைத் தருகிறது.



www.saivamonline.com

தொல்காப்பியப் பொருளதிகாரம் வழங்கும் அறிவியல் கூறுகள் மிகப் பலவாகும். உலகத்தை, காடு, மலை, நீர், மணல் என நான்காகப் பகுத்து, அவற்றுக்கு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனப் பெயர் சூட்டி, அவர் இலக்கணம் நடத்திச் செல்வது, இயற்கையோடு இயைந்த நிலவியல் கூறுபாடாக அமைகிறது. மரபியலில், உலகமாவது யாது? என்ற வினாவை முன்னிறுத்தி, விடை கூற வந்த தொல்காப்பியர்,

*"நிலம் நீர்தீவளி விசும் போடைந்துங்*
*கலந்த மயக்கம் உலகம்"*

என்று வரையறுக்கிறார். "உலகம் என்பது, உலகினையும், உலகில் உள்ள பொருள்களையும். உலகமாவது, முத்தும், மணியும் கலந்தாற்போல நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என விரவி நிற்கும். உலகினுள் உள்ள பொருள், பொன்னும், வெள்ளியும், செம்பும் உருக்கி ஒன்றானாற் போல, வேற்றுமைப் படாது நிற்கும். அவ்விரண்டினையும் உடைத்தாகலின், உலகத்தை, கலந்த மயக்கம் என்றார்" என்று இவ்வரிகளுக்கு, உரையாசிரியர் இளம்பூரணர் விளக்கம் தருகிறார். இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு, உலகம், ஐம்பெரும் பூதங்களின் கலப்பு என்பதைக் கண்டு தெளிந்த தொல்காப்பியரின் அறிவுடைமை நமக்குப் பெருமிதம் சேர்க்கிறது.

---

***இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு, உலகம், ஐம்பெரும் பூதங்களின் கலப்பு என்பதைக் கண்டு தெளிந்த தொல்காப்பியரின் அறிவுடைமை நமக்குப் பெருமிதம் சேர்க்கிறது.***

---

மனிதனை, ஆறறிவு உயிர் என்பர் அறிவியலார். மற்றைய உயிர்களிடம் காணப்படாத பொருள்களைப் பகுத்தறியும் ஆறாவது அறிவு, மனித இனத்திற்கே உரியது. அதுவே, மனிதனைப் பிற உயிர்களிடமிருந்து வேறுபடுத்தி நிற்கிறது என்று, அறிவியலார் கண்டு தெளிந்த இந்த உண்மை, பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது நமக்கு வியப்பைத் தருகிறது. ஓரறிவு முதல் ஆறறிவு வரை, உயிர்கள் எவ்வாறு பகுக்கப்படுகின்றன என்பதையும், என்ன அடிப்படையில் அவை வேறுபிரிக்கப்படுகின்றன என்பதையும், தொல்காப்பியம் துல்லியமாக விளக்கி நிற்கிறது. தொடு உணர்ச்சி ஒன்று மட்டுமே உடைய உயிர் ஓரறிவு என்றும், அதனோடு, நாச்சுவை அறியும் இரண்டு புலன்கள் உடைய உயிர் ஈரறிவு உயிரென்றும், இவற்றுடன், மூக்கு நுகர்ச்சியும் கொண்ட



www.saivamonline.com

உயிர்கள் மூன்றறிவு உயிர்கள் என்றும், இம்மூன்றுடன் பார்த்தல் புலனுடைய உயிர்கள் நான்கறிவுடையன என்றும், இந்த நான்குடன் செவிப்புலனும் அமைந்த உயிர்கள் ஐந்தறிவுடையன என்றும், இவற்றோடு மனத்தினால் அறியும் ஆறாவது அறிவு உடையவன் மனிதன் என்றும், தொல்காப்பியர் வரை யறுத்துக் காட்டுவது, அவரது அறிவியல் சார்ந்த அறிவுடைமைக்குச் சான்று கூறி நிற்கிறது. அத்துடன், இத்தகு அறிவு படைத்த உயிர்கள் எவை, எவை என்பதற்கு, சிற்சில சான்றுகளையும் தொல்காப்பியர் எடுத்துக் காட்டுகிறார். இப்பகுப்பு அமைந்த நூற்பா வருமாறு;

*“ஒன்றறிவதுவே உற்றறி வதுவே*
*இரண்டறிவதுவே அதனொடு நாவே*
*மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே*
*நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே*
*ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே*
*ஆறறிவதுவே அவற்றொடு மனனே*
*நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே”*

தொல்காப்பியரின், உளவியல் சார்ந்த அறிவியல் கோட்பாடுகளைப் பொருளாதிகாரத்தின் மெய்ப்பாட்டியலில் நிறைவாகக் காண முடிகிறது. எட்டு வகை மெய்ப்பாடுகளையும், அவை ஒவ்வொன்றும், தோன்றுவதற்குரிய மூலக்கூறுகளையும், விளக்கி உரைக்கும் தொல்காப்பிய நூற்பாக்கள் பெரிதும் ஆய்வுக்கு உரியன. மெய்ப்பாட்டைப் பகுத்துக் கொண்டு 1. சுவைபடு பொருள், 2. சுவை, 3. குறிப்பு, 4. சத்துவம் எனச் சுவைக்குரிய வழக்கிலக்கிணத்தைத் தொல்காப்பியர் வழி நின்று உரையாசிரியர்கள் விளக்கிப் பெருமை சேர்க்கின்றனர். தொல்காப்பிய முதல் உரைகாரர் இளம் பூரணர், இவை பற்றி விளக்கும் போது,

“பேயானும், புலியானும், கண்டானொருவன் அஞ்சியவழி, மயக்கமுங் கரத்தலும், நடுக்கமும், வியர்ப்பு முளவாகின்றே. அவற்றுள், அச்சத்திற்கேதுவாகிய புலியும், பேயும், சுவைபடு பொருள். அவற்றைக் கண்ட காலந் தொட்டு, நீங்காது நின்ற அச்சம் சுவை. அதன்கண், மயக்கமும், கரத்தலும், குறிப்பு. நடுக்கமும் வியர்ப்பும் சத்துவம். இவற்றுள் நடுக்கமும் வியர்ப்பும் பிறர்க்குப் புலனாவது.”

கடைச் சங்க இலக்கியங்களுள், தமிழர் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவது, புறநானூறு ஆகும். பண்டைத் தமிழரின்



www.saivamonline.com

வானநூல் புலமைக்கு, இத்தொகை நூலுள், ஏராளமான சான்றுகள் உள்ளன. வானத்தில் நிலவும் கோள்களைப் புறநானூறு நாள் மீன்கள் என்றும், கோள் மீன்கள் என்றும் இரண்டாகப் பகுத்துச் சுட்டுகிறது. நாள் மீன்கள் என்பன, இயற்கை ஒளியை உடையன. அவை தாமே மின்னும் தன்மையன. சூரியனைப் போல், அவை, ஒளியை வழங்கும் தன்மை உடையன என்றும், அங்ஙனமின்றி, சுய ஒளி இல்லாத, பிற நாள் மீன்களின் ஒளியைக் கொண்டு ஒளிர்வன கோள் மீன்கள் என்றும், புறநானூறு இனம் பிரித்துக் காட்டுகிறது.

சங்ககாலத் தமிழரின் வானநூல் அறிவுக்கு, கூடலூர்க் கிழார் என்ற புலவர் பாடிய பாடல் ஒன்று சான்று கூறி நிற்கிறது. வானத்திலிருந்து ஒருநாள், ஒரு மீன் தீப்பறக்கக் காற்றால் பிதிர்ந்து பூமியை நோக்கி விழக் கண்ட கவிஞர், தம் வான நூல் புலமையால், நாடாளும் சேர மன்னன் இன்றிலிருந்து ஏழாம் நாள் இறந்து படுவான் என்று கணித்துக் கூறினார். மன்னவனும், அவ்வாறே ஏழாம் நாள் மடிந்தான். விண், இம்மண்ணில் விளைவிக்கும் விளைவுகளையெல்லாம், கணித்து உரைக்கும் வானநூல் அறிவுக்கு, கூடலூர்க் கிழாரின் பாடல் பெரும் சான்றாய் அமைகிறது. புறநானூற்றின் 229 ஆம் பாடலான அது:

*“ஆடியல் அழற்குட்டத்து*
*ஆரிருள் அரையிரவின்*
*முடப்பனையத்து வேர்முதலாக்*
*கடைக்குளத்துக் கயம்காயப்*

*பங்குனி உயர் அழுவத்துத்*
*தலைநாண்மீன் நிலைதிரிய*
*நிலைநாண்மீன் னதனெதி ரேர்தரத்*
*தொன்னாண்மீன் துறைபடியத்*
*பாசிச் செல்லாது ஊசி முன்னாது*
*தளக்கர்த்திணை விளக்காகக்*
*கணைஎரி பரப்பக் கால் எதிர்பு பொங்கி*
*ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே”*

இப்பாடல் தரும் பொருள்:

“மேட இராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதல் காலின்கண், நிறைந்த இருளையுடைய, பாதியிரவின்கண், முடப்பனை போலும் வடிவையுடைய, அனுட நாளின் அடியின், வெள்ளி முதலாகக் கயமாகிய குளவடிவு போலும் வடிவையுடைய, புனர்பூசத்துக் கடையின் வெள்ளி



www.saivamonline.com

எல்லையாக விளங்கப், பங்குனி மாதத்தினது, முதற் பதினைந்தின்கண், உச்சமாகிய உத்தரம் அவ்வுச்சியினின்றும் சாய, அதற்கு எட்டாம் மீனாகிய மூலம் அதற்கு எதிரே எழாநிற்க, அந்த உத்தரத்திற்கு முன் செல்லப்பட்ட எட்டாம் மீனாகிய மிருகசீரிடமாகிய நக்கத்திரம் துறையிடத்தே தாழக் கீழ்த்திசையிற் போகாது, வடதிசையிற் போகாது, கடலாற் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக முழங்காநின்ற தீப்பரக்கக் காற்றாற் பிதிர்ந்து கிளர்ந்து ஒரு மீன் வீழ்ந்தது வானத்தினின்றும்." அது பங்குனி மாதம் முதற் பதினைந்தில், கார்த்திகை நாள், நிறைந்த இருட்டு, உத்தரம் உச்சியிலிருந்து சாய, மூலம் எழ மிருக சீரிடம் மறைய ஒரு மீன் வடக்கும் கிழக்கும் போகாமல் இடைநடுவே தீப்பரக்க விழுந்தது. இதனைக் கண்ட புலவர் பெருமான் கூடலூர்க்கிழார், கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை அதன் ஏழாம் நாள் இறப்பானென அஞ்சினார். அவர் அஞ்சியபடியே அவன் இறந்தான் என்றால், அக்காலத்து வானநூலறிவு எவ்வளவு மேம்பட்டிருந்ததென்பது புலனாகின்றது.

***ஓரறிவு முதல் ஆறறிவு வரை, உயிர்கள் எவ்வாறு பகுக்கப்படுகின்றன என்பதையும், என்ன அடிப்படையில் அவை வேறுபிரிக்கப்படுகின்றன என்பதையும், தொல்காப்பியம் துல்லியமாக விளக்கி நிற்கிறது.***

மேலும், தொல்காப்பியத்தில் கண்டது போல், ஐம்பெரும் பூதங்கள் பற்றிய நம்மவர்களின் அறிவியல் அறிவுக்கு, புறநானூற்றில் சான்றுகள் பல உள்ளன. ஐம்பெரும் பூதங்களும், ஒன்றிலிருந்து ஒன்று, தோற்றம் கொண்டன; அல்லது, அவை ஒன்றுக்கு ஒன்று பற்றுக்கோடாக அமைந்துள்ளன என்பதை, சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்பானை, முரஞ்சியூர் முடிநாகனார் பாடிய புறநானூற்றின் முதல் பாடல் விளக்கி நிற்கிறது. மண், அணுக்களால் செறிந்தது என்றும், அதன்மேல் ஆகாயம் ஓங்கி விரிந்துள்ளது என்றும், அவ்வாகாயத்தைக் காற்றுத் தடவி வரும் என்றும், அக்காற்றின்கண் தடைப்படுவது தீ என்றும், அத்தீயோடு மாறுபட்டது நீர் என்றும் அவர் விளக்குகிறார்.

*"மண்டிணிந்த நிலனும்*
*நிலனேந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*
*வளித்தலை இய தீயும்*
*தீமுரணிய நீரு மென்றாங்*
*கைம்பெரும் பூதத் தியற்கை போல"*

என்பன மேற்கூறிய கருத்தமைந்த புறநானூற்று வரிகள்.



www.saivamonline.com

*ஐம்பெரும் பூதங்களும், ஒன்றிலிருந்து ஒன்று, தோற்றம் கொண்டன; அல்லது, அவை ஒன்றுக்கு ஒன்று பற்றுக்கோடாக அமைந்துள்ளன என்பதை, சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்பானை, முரிஞ்சியூர் முடிநாகனார் பாடிய புறநானூற்றின் முதல் பாடல் விளக்கி நிற்கிறது.*

அக்காலத்தே, விண்ணின் கூறுபாடுகள் பலவற்றையும், துல்லியமாக அறிந்திருந்த, அறிஞர்கள் பலர் வாழ்ந்திருந்தனர் என்பதை, புறநானூற்றின் முப்பதாவது பாடலில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பதிவு செய்துள்ளார். ஞாயிறு செல்லும் பாதை, அதன் இயக்கம், அவ்வியக்கத்தால் சூழப்படும் பார் வட்டம், காறறு இயங்கும் திசைகள், எந்தவித ஆதாரமும் இன்றித்தானே நிற்கின்ற ஆகாயம், என்ற இவற்றை முழுவதுமாக அளந்தறிந்தவர்கள் போல என்று, அவர் கூறும் உவமையில் வானநூல் அறிவு பெற்றார் பலர் வாழ்ந்திருந்த செய்தி பதிவு செய்யப்படுகிறது. இதனை,

*"செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்<br>பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்<br>வளிதிரிதரு திசையும்<br>வறிது நிலைஇய காயமு மென்றிவை<br>சென்றளந் தறிந்தோர் போல"*

என வரும் வரிகள் அரண் செய்து நிற்கக் காணலாம்.

தண்ணீரின் இன்றியமையாமையை, நம்முன்னோர் பெரிதும் உணர்ந்திருந்தனர். அறங்களில் குளம் வெட்டுதலை ஒன்றாகக் குறிப்பர். சோழர்கள் பல ஏரிகளை வெட்டி, நீர் நிலைகளை உருவாக்கினர் என்பதை வரலாற்று நூல்கள் எடுத்தியம்புகின்றன. காவிரியின் குறுக்கே, கரிகாலன் கல்லணை அமைத்தான் என்பது, நம் முன்னோர்களின் நீர் நிர்வாகத்திற்குச் சான்று கூறி நிற்கின்றது. பாண்டிய நெடுஞ்செழியன் என்பானுக்கு அறிவுரை கூறவந்த குடபுலவியனார் என்ற புலவர் மன்னா, ஆழமுடைய நிலப்பகுதிகள் யாவற்றிலும் நீ, நீரைத் தேக்கி வைக்க ஏற்பாடு செய்! நிலத்தொடு நீரைத் தேக்கி வைத்தல், உடம்போடு உயிரைச் சேர்த்து வைக்கத் துணையாக அமையும் என்று அறிவுரை கூறுதல உறறு நோககததககது. இக்கருத்தமைந்த புறநானூற்று வரிகள் வருமாறு,



www.saivamonline.com

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்டு
உடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணியாளும்
இறைவன் றாட்குத வாதே யதனால்
அடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே"

இவ்வாறு புறநானூறு காட்டும் அறிவியற் செய்திகள் பலவாகும். அவற்றை விரிப்பிற் பெருகும்.

***ஞாயிறு செல்லும் பாதை, அதன் இயக்கம், அவ்வியக்கத்தால் சூழப்படும் பார் வட்டம், காற்று இயங்கும் திசைகள், எந்தவித ஆதாரமும் இன்றித்தானே நிற்கின்ற ஆகாயம், என்ற இவற்றை முழுவதுமாக அளந்தறிந்தவர்கள் போல என்று, அவர் கூறும் உவமையில் வானநூல் அறிவு பெற்றார் பலர் வாழ்ந்திருந்த செய்தி பதிவு செய்யப்படுகிறது.***

பண்டைத் தமிழரின், அறவியல் சார்ந்த வாழ்க்கை முறைக்கு, அழியாத சான்று கூறி நிற்பது நம் திருக்குறள் ஆகும். தனிமனித வாழ்வின் நெறிமுறைகளை அறத்துப் பாலிலும், மன்னனைத் தலைவனாகக் கொண்ட சமூக வாழ்வின் நெறிமுறைகளைப் பொருட் பாலிலும், இலக்கிய அழகோடு காதல் வாழ்வின் சிறப்புக்களைக் காமத்துப் பாலிலும் விரித்துரைக்கும் பெருமை, வள்ளுவருக்கே உரியது. அறவியல் நூலாயினும், ஆங்காங்கே பொதிந்து கிடக்கும், அறிவியல் நுட்பங்களை இந்நூலுள் இனங்காண முடிகிறது. அறிஞர்கள் பலர் இந்நூலுள் காணப்படும் அறிவியல் நுட்பங்களை அவ்வப்போது எடுத்துரைத்து வந்துள்ளனர். என்றாலும், முழுமையான ஆய்வு இன்று வரை, வள்ளுவத்தில் மேற்கொள்ளப் பெறாமை பெருங்குறையே ஆகும்.



www.saivamonline.com

*அறங்களில் குளம் வெட்டுதலை ஒன்றாகக் குறிப்பர். சோழர்கள் பல ஏரிகளை வெட்டி, நீர் நிலைகளை உருவாக்கினர் என்பதை வரலாற்று நூல்கள் எடுத்தியம்புகின்றன. காவிரியின் குறுக்கே, கரிகாலன் கல்லணை அமைத்தான் என்பது, நம் முன்னோர்களின் நீர் நிர்வாகத்திற்குச் சான்று கூறி நிற்கின்றது.*

வள்ளுவத்தை ஆராய்ந்த டாக்டர். வா.செ. குழந்தைசாமி, வள்ளுவம் மெய்யறிவுச் சார்புடைமை உடைய நூலாயினும், அவற்றுக்கும் மேலே, அறிவியல் சார்ந்த நுட்பங்களையும் தாங்கியே நிற்கின்றது என்பதைத் தம், "வாழும் வள்ளுவம்" என்ற நூலுள் விரிவாக எடுத்துரைக்கிறார். "இயன்ற வரை மனித சமுதாயத்தின் முழுமை பற்றியும் எண்ணி, அதன் இயல்புகளை ஆய்ந்து, அதன் நிறை, குறைகளைத் தெரிந்து, கரும்பிலிருந்து சாறு பிழிவது போல, மானிட வாழ்வில் இயற்கையிலிருந்து நிலைக்கக்கூடிய சில உண்மைகள், அதே சமயத்தில் பயன் படக்கூடிய சில உண்மைகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார்" என்று அவர் குறிப்பிடும் பகுதி உற்று நோக்கத்தக்கது.

அரசியல் அமைப்புக்கள் மாறலாம்; ஆட்சி முறைகள் மாறலாம்; சமுதாயப் பழக்க வழக்கங்கள் மாறலாம்; அம்மாற்றங்கள் காலத்தாலும் இடத்தாலும் நிகழலாம். மேலெழுந்தவாரியான இத்தோற்றங்களைக் கடந்து, மனித சமுதாயத்தின் வாழ்வில் அதன் ஆழத்தில் நிலைத்து நிற்கும் அடிப்படைகள் சில உள்ளன. வள்ளுவர் இயன்ற அளவில் இந்த நிலையில் நின்று, வாழ்வியல் நெறி முறைகளை வகுத்திருக்கிறார். குறளின் இந்தக் கூறுபாடு அது காலம் கடந்து, இடம் கடந்து நிற்கத் துணைபுரிகிறது.

*"இயன்ற வரை மனித சமுதாயத்தின் முழுமை பற்றியும் எண்ணி, அதன் இயல்புகளை ஆய்ந்து, அதன் நிறை, குறைகளைத் தெரிந்து, கரும்பிலிருந்து சாறு பிழிவது போல, மானிட வாழ்வில் இயற்கையிலிருந்து நிலைக்கக்கூடிய சில உண்மைகள், அதே சமயத்தில் பயன் படக்கூடிய சில உண்மைகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார்".*

மெய்யறிவுச் சார்புடைய திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் விஞ்ஞான நுட்பத்திற்கு வள்ளுவரின் வான்சிறப்பின் ஒரு குறளை நாம்



www.saivamonline.com

சற்றே விரிவாக ஆராயலாம். இவ்வதிகாரத்தின் நிறைவில் அமைந்துள்ள அது, "நீரின்றி அமையாது உலகெனின் யார் யார்க்கும் வானின்று அமையாது ஒழுக்கு" என்று அமைகிறது. இக்குறளுக்கு, உரையாசிரியர் பரிமேலழகர், "எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரை இன்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறாது ஒழுகும் ஒழுக்கும் வானை இன்றி அமையாது" என்கிறார். சுருங்கச் சொல்வதானால் உலக வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாதது, இந்நீருக்கு மூலம், வானத்தில் இருந்து பொழியும் மழையே ஆகும் என்பது வள்ளுவர் கருத்து.

***கி.பி. 17 ஆம் நூற்றாண்டில், நீரின் மூல ஆதாரம் வான் மழையே, என்பதை மேலை நாட்டார் கண்டு தெளிந்ததற்கு முன்னதாக ஏறத்தாழ 1400 ஆண்டுகளுக்கு முன்னரே, நீர் ஆதாரத்திற்கு மூலம் மழைதான் என்று உறுதிபடக் கூறியிருப்பது வள்ளுவரின் அறிவியல் அறிவுக்குச் சான்றாய் அமைகிறது.***

அறிவியல் துறையில், பல்வேறு ஆய்வுகளை நிகழ்த்தி, உண்மைகளைக் கண்டு உலகுக்கு உரைத்த பெருமை மேலை நாட்டாருக்கு உரியது. இவ்வகையில் தண்ணீருக்கு எது மூலம் என்பது பற்றி, அவர்கள் பல திறப்பட்ட கருத்துக்களைக் கூறி வந்துள்ளனர். அவர்களின் யூகங்களின் அடிப்படையில் அமைந்த பழமைச் சிந்தனையில், ஆற்று நீரும், ஊற்று நீருமே முதல் ஆதாரங்கள் என்றனர். கி.பி. 17 ஆம நூற்றாண்டுக்குப் பின், இக்கருத்தை மாற்றிக் கொண்ட மேலை நாட்டார், கடல் நீரே, மலைகளின் அழுத்தம் காரணமாக, நிலத்தின் அடியிலிருக்கும் குகைகளின் வழியாக ஊற்று நீராக நமக்குக் கிடைக்கிறது என்று நம்பினர். பிளேட்டோ முதலிய அறிஞர்களும், இக்கருத்தையே கொண்டிருந்தனர். இதன் மேல் ஐயங்களை எழுப்பிய பலர், கடல் நீரே, ஊற்று நீராக வருமானால் அது, உப்புக் கரித்திருக்க வேண்டும். ஊற்று நீரில் உப்பு இல்லை என்பதால் இக்கருத்தை ஏற்பதற்கில்லை என்று மறுத்தனர். வேறொரு சாரார், சூரிய வெப்பத்தால் ஆவியாகும் கடல் நீரின் ஒரு பகுதி, நிலத்தடிக் குகைகள் மூலமாக, ஊற்று நீராகவும், நதிகளின் தொடக்கப் பகுதிகளில் செறிந்து ஆறாகவும், பெருக்கெடுத்து வருகின்றன என்று புதிய கருத்தை முன் வைத்தனர். இக்கருத்தை அரிஸ்டாட்டிலும், கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த லுக்ரெட்டியுஸ், பிளினி முதலிய அறிஞர்களும் வ்ழி மொழிந்தனர். மிகப் பிற்காலத்தே கி.பி. 1452 - 1519 காலப் பகுதியில் வாழ்ந்திருந்த லியோனாடே டாவின்சி என்ற அறிஞர் மழையே, நீர் ஆதாரத்திற்கு தோற்றுவாய் என்ற கருத்தை முதன் முதலாக



www.saivamonline.com

வெளியிட்டார். பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பாலிசி என்ற அறிஞர், இக்கருத்தை ஏற்று மண்ணும் வானமும் தவிர, நான் பார்க்கவும், படிக்கவும் எனக்கு நூல்கள் இல்லை. இவை இரண்டும், எல்லோருக்கும் கிடைக்கும் நூல்களாகும். நான் ஊற்றுக்கள் எப்படி உருவாகின்றன என்பதைப் பற்றி நீண்ட காலம் சிந்தனையைச் செலுத்தினேன். இறுதியாக, மழை ஒன்றுதான் ஊற்றுகளுக்கும் அடிப்படை என்ற முடிவுக்கு வந்தேன் என்று தெளிவுபடுத்தினார். இவ்வாறு கி.பி. 17 ஆம் நூற்றாண்டில், நீரின் மூல ஆதாரம் வான் மழையே, என்பதை மேலை நாட்டார் கண்டு தெளிந்ததற்கு முன்னதாக ஏறத்தாழ 1400 ஆண்டுகளுக்கு முன்னரே, நீர் ஆதாரத்திற்கு மூலம் மழைதான் என்று உறுதிபடக் கூறியிருப்பது வள்ளுவரின் அறிவியல் அறிவுக்குச் சான்றாய் அமைகிறது.

***"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும், "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும், அவர் பதிவு செய்யும் குறள் வரிகள், அறிவியல் ஆய்வுக்கு அவர் வரையறுக்கும் இலக்கணக் கோட்பாடுகளாகவே காணப்படுகின்றன.***

இன்று, எல்லாவற்றையும், அறிவியல் கண்கொண்டு பார்க்கும் வழக்கம் காணப்படுகிறது. இதனை, வள்ளுவத்திலும் நம்மால் காண முடியும். எந்த ஒரு பொருளையும் அறிவுபூர்வமாக ஆராய்ந்து, எல்லாரும் ஏற்கத்தக்க நிலையில் நிறுவுவதே அறிவியல் ஆய்வு முறையாகும். இந்த முறைக்கு, இலக்கணம் வகுப்பார் போல் வள்ளுவர், இரண்டு குறள்களை, தம் நூலுள் பதிவு செய்கிறார். மனித ஆற்றல்கள் யாவற்றினும் மேம்பட்டதாக, அவர் அறிவையே வற்புறுத்துகிறார். "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றும், "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும், "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும், அவர் பதிவு செய்யும் குறள் வரிகள், அறிவியல் ஆய்வுக்கு அவர் வரையறுக்கும் இலக்கணக் கோட்பாடுகளாகவே காணப்படுகின்றன.

திருவள்ளுவரின் மருந்து என்ற அதிகாரம், பண்டைத் தமிழர்களின் மருத்துவம் சார்ந்த அறிவியல் அறிவுக்குச் சான்றுகூறி நிற்கிறது. இன்றும், பல அறிஞர்கள் இவ்வதிகாரத்தை ஆராய்ந்து



www.saivamonline.com

வள்ளுவரின் மருத்துவ அறிவை வியந்து போற்றுகின்றனர். மருந்தாவது யாது? என்ற வினாவை எழுப்பிக் கொண்டு, அதற்கு விடை கூற வந்த உரையாசிரியர் பரிமேலழகர், "பழவினையாலும் காரணங்களாலும்" மக்கட்கு, வாதம் முதலிய பிணிகள் வரும், அவற்றுள், பழவினையான் வருவன அதன் கழிவின்கண் அல்லது தீராமையின் அதனை ஒழித்து ஏனைக் காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் திறம் மருந்து எனப்பட்டது என விளக்கம் தருகிறார். காரணங்களான் வரும் நோய் என்பன, உணவு மற்றும் மனிதச் செயல்பாடுகளது ஒவ்வாமையால் வருவது என்று, அவர் மேலும் விளக்கம் கூறுகிறார்.

*பிற மருந்துகளைப் பெரிதெடுத்துப் பேசாது,* "உணவே மருந்து" *என்ற இயற்கை மருத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளைத் திருவள்ளுவர் வற்புறுத்துகிறார். நோயற்ற, இயற்கை வாழ்வு வாழ, வழிகூறும் திருவள்ளுவர், அந்நெறி பற்றி வாழ்வார்க்கு பிறிது ஒரு மருந்து வேண்டாம்; உணவே மருந்தாக அமையும் என்பதை* "மருந்தென வேண்டாவாம்" *என்று பதிவு செய்கிறார்.*

திருக்குறளின் ஓர் அதிகாரத்திற்கு மருந்து என்று ஆசிரியர் பெயரிட்டாலும், அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள குறட்பாக்கள் பலவும் உணவைப் பற்றியே பேசக் காண்கிறோம். எனவே, பிற மருந்துகளைப் பெரிதெடுத்துப் பேசாது, "உணவே மருந்து" என்ற இயற்கை மருத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளைத் திருவள்ளுவர் வற்புறுத்துகிறார். நோயற்ற, இயற்கை வாழ்வு வாழ, வழிகூறும் திருவள்ளுவர், அந்நெறி பற்றி வாழ்வார்க்கு பிறிது ஒரு மருந்து வேண்டாம்; உணவே மருந்தாக அமையும் என்பதை "மருந்தென வேண்டாவாம்" என்று பதிவு செய்கிறார்.

இன்று, உலகெங்கும் பெரிதும் போற்றப்படும் அலோபதி என்ற ஆங்கில மருத்துவத்தின் தந்தையாகக் கிப்பா கிரட்டேஸ் என்பாரை அறிஞர் குறிப்பர். நோய்க்குக் காரணம் உணவு. அந்த நோய்க்கு மருந்தும் உணவே என்பதுதான் அவர் கூறிய மருத்துவ முறையின் அடிப்படை. உணவாகப் பயன்படாதவை, மருந்தாகப் பயன்படா என்றும், மக்கள் நோயின்றி வாழ, உணவையே மருந்தைப் போல் உட்கொள்ள வேண்டும் என்றும், அவர் மேலும் வலியுறுத்துவார். இன்று, உலகில் வாழும் இயற்கை மருத்துவர்கள் யாவரும், கடைப்பிடித்து வரும் இக் கொள்கையைத் திருவள்ளுவர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பதிவு செய்திருப்பது, நம் முன்னோர்களின் மருத்துவ அறிவிற்குச்சான்று கூறி நிற்கிறது.



www.saivamonline.com

மருந்து என்ற அதிகாரத்தின் முதல் ஏழு குறட்பாக்கள், நோயின் தோற்றத்திற்கான காரணங்களையும், நோயின்றி வாழ எப்படிப்பட்ட உணவுப் பழக்கம் தேவை என்பதையும், எடுத்துரைக்கின்றன. அடுத்து வரும், இரு குறள்கள் மருத்துவனின் செயல்பாடுகளை வரையறுக்கின்றன. இறுதிக் குறள், மருத்துவத்தின் இன்றியமையாத நான்கு கூறுகளைப் பதிவு செய்து நிற்கிறது.

உணவும், ஒருவனது செயல்களும், அவன் உடல் தகுதிக்கு மேலாக மிகுந்தாலும், குறைந்தாலும், அவனை, இயற்கை மருத்துவ நூலார் கூறும், வாதம் முதலாகிய மூன்று நோய்களும் பற்றித் துன்புறுத்தும். முன்உண்டது செரித்து, உடலை விட்டு நீங்கியதைத் தெளிவாக அறிந்து, பின்னர் ஒருவன் உண்பானானால் அவனுக்கு மருந்து என்ற ஒன்று தேவைப்படாது. உண்டது அகன்றபின், அளவறிந்து ஒருவன் உண்பானானால், அதுவே, உடல் நெடுங்காலம் நிலைபெற்று நிற்பதற்குப் பெரிதும் அடிப்படையாக அமையும்.

***மருத்துவம் என்பது, நான்கு கூறுகளைக் கொண்டது என்பது, வள்ளுவரின் கோட்பாடு. ஒன்று நோய் பற்றப்பட்டவன், இரண்டு மருத்துவன், மூன்று மருத்துவன் பயன்படுத்தும் மருந்து, நான்கு மருத்துவன் சொல்வழி அதனை நோயாளியின்பால் செலுத்துபவன் என்று எழுதிச் செல்கிறார்.***

நன்கு பசி எடுத்தபின், மாறுபாடு இல்லாத உணவுகளை மட்டுமே தேர்ந்து மனிதன் உண்ணவேண்டும். தம்முள் மாறுபாடு இல்லாத உணவைத் தம்விருப்ப அளவு பாராது, பிணி வராத அளவு ஒருவன் உண்பானானால் அவன் உயிர்க்குத் துன்பம் இல்லை. செரித்த அளவு அறிந்து உண்பானிடம் என்றும் இன்பம் நிலைபெறும். அதுபோல், அளவுக்கு மீறிய உணவு உண்பானிடம் நோய் நிலைபெற்று நிற்கும். தன் உடல் தகுதி, அதற்கேற்ற உணவு, உண்ணவேண்டிய காலம் முதலியவற்றை ஆராயாது, ஒருவன் அளவுக்கு மீறி உண்பானானால் அவன் எல்லையற்ற நோய்களால் துன்புறுவான்.

இவ்வாறு, ஏழு குறள்களால் வள்ளுவர் நோய்க்கான காரணங்களையும், உணவு கொள்ளும் முறைகளையும், முறையாகப் பதிவு செய்கிறார். இனி, ஒரு மருத்துவன் என்பான், நோயாளியிடம் திகழ்கின்ற நோயை, அதன் குறிகளால் இன்னது என்று துணிந்து, அதன்பின், அது, வருவதற்கான காரணத்தை ஆராய்ந்து, பின்னர்



www.saivamonline.com

அதனைத் தீர்க்கும் வழி முறைகளைக் கண்டு தெளிந்து, நிறைவாகப் பிழை ஏதும் இன்றி மருத்துவத்தைச் செய்தல் வேண்டும் என்கிறார். இதனை,

*"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்"*

என்ற குறளால் பதிவு செய்கிறார். மேலும், ஒரு மருத்துவன் என்பான், நோயாளியின் செயல், அவனிடம் காணப்படும் நோய் அளவு, அதனைத் தீர்ப்பதற்கேற்ற காலம் முதலியனவற்றை நன்கறிந்து, அவற்றோடு பொருந்தச் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார்.

---

***கண்ணுக்குப் புலப்படாத வானவெளியில் நூறு கோடிக்கும் மேற்பட்ட பல்வேறு அண்டங்கள் நிறைந்து கிடப்பதாகவும், மேற் கூறையிலிந்து வீட்டினுள் பாய்ந்து வரும் ஒளிக்கீற்றில், சிறு தூசுகள் மிதந்து நிற்றலைப் போல், இவ்வண்டங்கள்,விண்ணிலே மிதந்து நிற்கின்றன என்றும் அவர் பதிவு செய்துள்ளார்***

---

மருத்துவம் என்பது, நான்கு கூறுகளைக் கொண்டது என்பது, வள்ளுவரின் கோட்பாடு. ஒன்று நோய் பற்றப்பட்டவன், இரண்டு மருத்துவன், மூன்று மருத்துவன் பயன்படுத்தும் மருந்து, நான்கு மருத்துவன் சொல்வழி அதனை நோயாளியின்பால் செலுத்துபவன் என்று எழுதிச் செல்கிறார். வள்ளுவரின் மருந்தாற்றலுக்கு இவை சான்று கூறி நிற்கின்றன.

அறநூல்களைப் போல், தமிழில் கிளைத்தெழுந்த, நம் முன்னோர்களின், சமய நூல்களிலும், ஏராளமான மருத்துவக் கூறுகள் அமைந்து கிடக்கின்றன. சைவசமய நூல்களுள், பெரிதும் போற்றப்படும் மாணிக்கவாசகரின் திருவாசகம் அறிவியல் கூறுகள் பலவற்றைப் பதிவு செய்துள்ளது. இதன்கண் அமைந்துள்ள திருவண்டப்பகுதி என்ற நெடும் பாடலில், வானத்தில் நிலவும், பல்வேறு மண்டலங்களின் அமைப்புப் பற்றி, பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. கண்ணுக்குப் புலப்படாத வானவெளியில் நூறு கோடிக்கும் மேற்பட்ட பல்வேறு அண்டங்கள் நிறைந்து கிடப்பதாகவும், மேற் கூறையிலிந்து வீட்டினுள் பாய்ந்து வரும் ஒளிக்கீற்றில், சிறு தூசுகள் மிதந்து நிற்றலைப் போல், இவ்வண்டங்கள், விண்ணிலே மிதந்து நிற்கின்றன என்றும் அவர் பதிவு செய்துள்ளார். இதனை,



www.saivamonline.com

*"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்*
*அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி*
*ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்*
*நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன*
*இன்னுழைக் கதிரில் நுண் அணுப் புரைய"*

என வரும் பகுதி பதிவு செய்து நிற்கிறது.

தமிழர்களின், பல்வேறு புலமை சான்ற அறிவுக்கு, ஒரு கலைக்களஞ்சியமாக, திருமூலரின் திருமந்திரம் திகழ்கிறது. இதனுள், அமைத்து கிடக்கும் மருத்துவக் குறிப்புகள் பற்றி, இன்னும் விரிவாக ஆராயப்படவில்லை. இந்நூலுள் அமைந்துள்ள, இரண்டாம் தந்திரத்துக் கருஉற்பத்தி என்ற பிரிவில், பல்வேறு மருத்துவக் குறிப்புகள் நிறைவாக இடம் பெற்றுள்ளன. குழந்தைகள் குறளாய், முடமாய், கூனாய், மந்தமாய், மூங்கையாய், குருடாய்ப் பிறப்பதற்குரிய காரணங்கள் எல்லாம் இந்நூலில் மருத்துவ முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சிலர், நூறாண்டு வாழவும், சிலர் எண்பது ஆண்டு வாழவும் உரிய காரணங்கள் இந்நூலுள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இன்று, ஆண் குழந்தைகள் வேண்டும் என்ற பெரும் விருப்பம் பெற்றோர்களிடையே காணப்படுகிறது. பெண் குழந்தைகள் கருக்கொண்டு வளர்ந்த பின், அவற்றைக் கருவில் அழித்தலும், பிறந்ததும், பெண் குழந்தை என்ற தெரிந்ததும் அதனைக் கொன்று விடுதலும் ஆகிய கொடுமைகள் நிகழ்கின்றன. இன்றுவரை, ஆண் குழந்தைகளையோ, பெண் குழந்தைகளையோ, விரும்பியவாறு பெற்றுக் கொள்வதற்கு மருத்துவத்தில் ஏதும் வழி காணப்படவில்லை. ஆனால், திருமந்திரம் ஆண் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவும், பெண் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவும் வழிகாட்டி நிற்பது நமக்கு வியப்பைத் தருகிறது.

ஆணும், பெண்ணும், குழந்தைப் பேற்றுக்காகக் கூடுங்கால், அவர்கள் இருவரது சுவாசங்களும், மூக்கின் வலத்துவாரம் வழி நிகழும்போது கருத்தரிக்குமானால் அது ஆண் குழந்தையாக அமையும் என்றும், சுவாசம் இடத்துவாரம் வழி அமையுமானால் அப்போது கருத்தரிக்கும் குழந்தை பெண் குழந்தையாக அமையும் என்றும் திருமந்திரம், ஒரு வியப்பூட்டும் செய்தியை நமக்குத் தருகிறது. இதனை,

"குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபான னெதிர்க்கில்
குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கிலே"



www.saivamonline.com

என்ற திருமந்திரப் பாடல் விளக்கக் காணலாம். இதுபோல் இப்பகுதியில் அமைந்துள்ள வியப்பூட்டும் அரிய குறிப்புக்கள் பலவாகும். சமய நூல்களை ஒட்டி, சமயத் துறையில், தத்துவ நூல்கள் உருக் கொண்டன. இவற்றுள் சைவ சமயம் சார்பாக எழுந்த சாத்திர நூல்கள், முற்றிலும் அறிவியல் ஆய்வுக்கு உட்பட்டனவாகத் திகழ்தல், மேலை நாட்டாராலும் ஆய்ந்து நிறுவப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த சாத்திர நூலுள், முதன்மையான நூலாகத் திகழும், மெய்கண்டாரின் சிவஞான போதம், ஒரு தலைசிறந்த, சமயம் சார்ந்த, காரண காரியங்களுக்கு உட்பட்ட முடிவுகளை விளக்கி நிற்கும், ஒரு அறிவு நூலாகும். சித்தாந்தம் என்ற சொல்லே அறிவின் எல்லை என்ற பொருளைத் தருவது.

***இன்றுவரை, ஆண் குழந்தைகளையோ, பெண் குழந்தைகளையோ, விரும்பியவாறு பெற்றுக் கொள்வதற்கு மருத்துவத்தில் ஏதும் வழி காணப்படவில்லை. ஆனால், திருமந்திரம் ஆண் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவும், பெண் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவும் வழிகாட்டி நிற்பது நமக்கு வியப்பைத் தருகிறது.***

***ஆணும், பெண்ணும், குழந்தைப் பேற்றுக்காகக் கூடுங்கால், அவர்கள் இருவரது சுவாசங்களும், மூக்கின் வலத்துவாரம் வழி நிகழும்போது கருத்தரிக்குமானால் அது ஆண் குழந்தையாக அமையும் என்றும், சுவாசம் இடத்துவாரம் வழி அமையுமானால் அப்போது கருத்தரிக்கும் குழந்தைகள் பெண் குழந்தையாக அமையும் என்றும் திருமந்திரம், ஒரு வியப்பூட்டும் செய்தியை நமக்குத் தருகிறது.***

இந்நூலுள் மூன்று பொருள்கள் அறிவாராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. ஒன்று இறைவன், இரண்டு உயிர்கள், மூன்று உலகம். இம்முப்பொருள்களையும், சிவஞானபோதம், பிரமாணவியல் என்ற பகுதியில் அறிவாராய்ச்சி செய்து, அவற்றின் உண்மைகளை நிறுவிக் காட்டுகிறது. இத்தகு நூல்கள் நம், மெய்யுணர்வு பெற்ற அருளாளர்களின், இறைமை சார்ந்த அறிவியல் அறிவுக்கு உயரிய சான்றாகத் திகழ்கின்றன. இவற்றையெல்லாம் ஆராய்ந்து உலகுக்கு வெளிப்படுத்த சமய நிறுவனங்களும் அமைப்புகளும் பல்கலைக் கழகங்களும் முன்வருதல் வேண்டும்.

ஆன்மிகத்தில் நிறைந்துள்ள அறிவியல் கூறுகள் குறித்து "ஆன்மிகமும் அறிவியலும்" என்ற தலைப்பில் பஞ்சநாத. தியாகசுந்தரம்



www.saivamonline.com

என்ற அறிஞர், ஒரு நூல் எழுதி வெளிப்படுத்தியுள்ளார். இதன்கண், இந்தியத் தத்துவச் சிந்தனைகளில் பொதிந்துள்ள, அறிவியல் கூறுகள் பலவும், பல்வேறு அறிவியல் நுட்பங்களும் பரவலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை இனம் காண முடிகிறது.

நம் தமிழ் இலக்கியங்களில், வேறு பல அறிவியல் குறிப்புக்களும் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் வியப்பூட்டும் செய்திகளாகவும், காப்பியக் கற்பனைகளாகவும், சமயம் சார்ந்த அற்புதங்களாகவும் நம்மவர்கள் கருதி மகிழ்ந்தார்களே தவிர, அவற்றை, அறிவியல் பூர்வமாக நிறுவுவதற்கு எவரும் முயற்சி மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இமயமலையில் நடைபெற்ற, சிவபெருமானின் திருமணக் காட்சியை, அகத்தியர் பொதிய மலையில் இருந்தவாறு கண்டு களித்தார் என்று, புராணங்கள் பதிவு செய்கின்றன. ஒரு தொலைக்காட்சி வடிவமைப்புக்குரிய, இக்கருத்தின்மேல், இறைமை சார்ந்த சமயக் கண்ணோட்டம் கொண்டு நம் முன்னோர் வியந்து நின்றனரேயன்றி, அறிவு பூர்வமாக இக்குறிப்பை நிறுவிக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டிலர்.

சீதைத் தீக்குளித்து எழுந்தாள் என்றும், நத்தனார் தீயில் இறங்கி வேற்று உருக்கொண்டு வெளிப்போந்தார் என்றும், திருமூலர், ஓர் உடம்பிலிருந்து மற்றோர் உடம்புக்குத் தம் உயிரைப் புகுத்தி, கூடுவிட்டுக் கூடு பாய்ந்தார் என்றும், இராவணன் சீதையை அபகரித்துக் கொண்டு, வான்வழி விமானத்தில் பறந்தான் என்றும், நாவுக்கரசர் கல்லைத் தெப்பமாக மிதக்க வைத்தார் என்றும், சுந்தரர் முதலை உண்ட பாலனை உயிரோடு மீட்டார் என்றும், ஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக்கினார் என்றும், சித்தர்கள் வானமார்க்கத்தில் பயணம் செய்தனர் என்றும் வரும் நூற்றுக்கணக்கான வியப்பூட்டும் இலக்கியக் குறிப்புக்கள், நம்மவர்களுக்கு எவ்வித அறிவியல் கண்ணோட்டத்தையும் உண்டாக்கவில்லை என்பது பெரும் குறையே ஆகும். இது, எப்படி நிகழ்ந்தது? இது எவ்வாறு சாத்தியம்? என்ற அறிவு பூர்வமான வினாக்கள், தமிழர்களால் ஏன் தொடுக்கப்படவில்லை என்ற வினாவிற்கு, விடை ஏதும் இன்றுவரை கிடைத்திலது.

இயற்கையோடு இயைந்த, பச்சிலை மருத்துவமாகிய சித்த மருத்துவத்தில் நம் முன்னோர்கள் கொடிகட்டிப் பறந்துள்ளனர். சித்தர் நூல்களில் நூற்றுக்கணக்கான மருத்துவக் குறிப்புகள் இன்றும் காணக்கிடக்கின்றன. என்றாலும், தான் அறிந்ததைப் பிறருக்கு உணர்த்த விரும்பாத நம் முன்னோர்களின் மனப் போக்கால், அம்மருத்துவக் குறிப்புகளின் உண்மை, இன்று அறிய முடியாமல் நிற்கிறது.



www.saivamonline.com

*இது, எப்படி நிகழ்ந்தது? இது எவ்வாறு சாத்தியம்? என்ற அறிவு பூர்வமான வினாக்கள், தமிழர்களால் ஏன் தொடுக்கப்படவில்லை என்ற வினாவிற்கு, விடை ஏதும் இன்றுவரை கிடைத்திலது.*

*தமிழ் நாட்டுச் சித்தர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர், கோரக்கர் என்பார். இவர் தரும் மருத்துவக் குறிப்புக்கள் பலவாகும். இவர் இயற்றிய நமநாசத் திறவுகோல் என்ற நூலில், உடலை நெடுநாள் வாழவைப்பதற்குரிய மிருத்யுவிஞ்சுக்குளிகை என்ற ஒன்றைப் பற்றி அரிதாக விளக்குகிறார்.*

---

தமிழ் நாட்டுச் சித்தர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர், கோரக்கர் என்பார். இவர் தரும் மருத்துவக் குறிப்புக்கள் பலவாகும். இவர் இயற்றிய நமநாசத் திறவுகோல் என்ற நூலில், உடலை நெடுநாள் வாழவைப்பதற்குரிய மிருத்யுவிஞ்சுக்குளிகை என்ற ஒன்றைப் பற்றி அரிதாக விளக்குகிறார். இந்நூலில் 49-50 ஆவது பாடல்களுக்கிடையே, “கிடக்கிது போகட்டும் காணே” என்று தொடங்கும் பாடல் முதல் 12 பாடல்களில் இக்குளிகையின் திறன் விரித்துரைக்கப்பட்டுள்ளது. உயிர் உடலில் தங்கித் தன்மணம் வீசி என்றும் வாழ, ஆயுள் வளர்ச்சிக்குளிகை (மிருத்யுவிஞ்சுக்குளிகை) பற்றிக் கூறுகின்றேன் என்ற முன்னுரையுடன், இக்குளிகையைச் செய்யும் முறையைக் கோரக்கச் சித்தர் கூறுகின்றார்.

சிப்பியை எடுத்து வந்து, உடைத்து உள்ளேயிருக்கும் தசையினைத் திரட்டிக் கொண்டு, அதன் அளவுக்குப் பாதியளவு, வெங்காரத்தைத் தூளாக்கிப் போட்டுப் பிசைந்து, ஒரு நாள் வைத்திருக்க, நீர் வடியும். பின் அதனை ஒரு பழகிய பாண்டத்தில் இட்டுக் குடநீரும், சிறு நீரும் சம அளவாகக் கலந்து உறுதீயாக எரித்துக் காய்ச்ச வேண்டும். சுண்டக் காய்ந்து மெழுகான பின், மெழுகளவில் எட்டில் ஒரு பங்கு, பிறந்த குழந்தை மேல் பூத்திருக்கும் மாவினைச் சேர்த்துக் கொண்டு வந்து கலந்து, கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர், திருநீற்றுவேர், வேளை வேர், மேனி வேர், பேய்க் குறிஞ்சாவேர் ஆகிய ஏழு வேர்ப் பொடிகளையும் வகைக்கு அரைப் பலமாகச் சேர்த்துச் சிறு நீர் விட்டரைத்துப் பின்பு, திருநீற்றுச் சாறு நீர் விட்டரைத்து மென்மையாக ஆக்க வேண்டும். பின்னர்க் கருக்குட நீர் விட்டுக் கல்வத்திலாட்டி மயனமாகச் செய்ய வேண்டும்.

இனி, முன்னர்க் கூறிய மதலை மாச்சேர்ந்த மெழுகுடன் இதனைச் சம அளவு சேர்க்க வேண்டும். இவ்வாறு சேர்த்தால் ஏழு



www.saivamonline.com

பலமாகும். அண்டச் சுண்ணம், வீரச் சுண்ணம், சத்தியுப்புச் சுண்ணம், சிவஉப்புச் சுண்ணம், விந்துச் சுண்ணம், வங்கச் சுண்ணம், சிங்கி தாளகம், கொளரி, கெந்தி, வெள்ளை, வெங்காரம், வெடியுப்பு, சீனம், துருசு, சூடன் ஆகிய இவற்றின் சுண்ணங்களும் சேர்த்துச் சுண்ணங்கள் பதினாறாகும். இச் சுண்ணங்களில் வகைக்குக் காற்பலம் எடுத்து முற்கூறப்பட்ட மெழுகுடன் சேர்த்துத் திருநீற்றுச்சாறு சம எடை கலந்து, இரண்டு யாமம் அரைத்து, மெழுகு போல் எடுத்துக் குன்றியளவாக உருட்டி நிழலில் உலர்த்த வேண்டும். இதுவே ஆயுள் வளர்ச்சிக் குளிகை யாகும்.

ஆயுள் வளர்ச்சிக் குளிகையை, ஆயுள் வளர்ச்சி மந்திரம் 15 ஓதிப் பூசை செய்து, அம்பிகையைத் தியானம் செய்து கொண்டு, ஆவின் வெண்ணெய்க்குள் வைத்து, நாள் ஒன்றுக்கு இரு வேளை, 40 நாள் உண்ண வேண்டும். புளி இல்லாப் பத்தியம் மேற்கொண்டு, போகத்தை நீக்க வேண்டும். இக் குளிகையை உண்டால் உடலும், உயிரும் வலுக்கும்; சாவு இல்லை. உயிர் பிரிந்த உடலின் மேல் சிறு நீரில் ஆயுள் விருத்திக் குளிகையை உரைத்துப் பூசினால், சூதின்றி இறந்தவர் எழுந்து பேசுவர். ஆயுள் வளர்ச்சி மந்திரம் 108 முறை ஓதிக் குளிகையைக் கொடுக்க வேண்டும். உயிர் பெற்று எழுந்தவனுக்கு, மூன்றே முக்கால் நாழிகைக்கும் மேலும் மருந்து வழங்கி உயிரை நிலைபெறச் செய்ய வேண்டும். இறந்தோரைப் பிழைத்தெழச் செய்யும் குளிகை இது. இப்பகுதியில் குறிக்கப் பெற்ற பதினாறு வகைச் சுண்ணங்களும், அவற்றின் செய் முறைகளும் கோரக்கர் நூல்களிலேயே முறைப்படுத்திக் கூறப்பெற்றன. தகுதிமிக்க மருத்துவ நூல் அறிஞர்கள் துணையோடு இத்தகு குளிகைகளை முறையாகச் செய்து மனித குலத்தை நீடு வாழ வைக்கச் சித்த மருத்துவர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு தொல்காப்பியம் தொடங்கி, சித்தர்கள் காலம் வரை, தமிழில் தோற்றம் கொண்ட, நூற்றுக் கணக்கான இலக்கண இலக்கிய - சமய தத்துவ நூல்களில் ஆயிரம் ஆயிரம் அறிவியல் கூறுகள் பொதிந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம், தேடிக் கண்டு, நம் முன்னோர்களின் அறிவியல் பேராற்றல்களை உலகுக்கு எடுத்துரைப்பதும், உண்மை காணமாட்டாத குறிப்புக்களின் மேல், ஆய்வுகள் நிகழ்த்தி உண்மை காண்பதும் தமிழர்களின் தலையாய கடமை ஆகும்.



www.saivamonline.com